Registered as a news paper in Ceylon  விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49 | மலர் 14
போன் 389 | தேசிய தினசரி | இதழ் 88

யாழ்ப்பாணம் சித்திரை 26  ரபி:அவ் 23  திங்கட்கிழமை  (8-5-72)

8 MAY 1972

ENGLISH
PUDLO
WATER PROOF CEMENT
Price Rs. 3/50 Per lb.
புட்லோ சீமெந்து
விலை: இறு ரூபா 3/50
கிடைக்குமிடம்:
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.
டெலிபோன்: 7130  தந்தி: KATHIR

# நல்லூர்; வட்டு. எம். பி. க்கள் காங்கிரஸிலிருந்து நீக்கம்!

## ஆனந்தசங்கரியும் இதை ஆதரித்தார்

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லூர் எம் பி திரு. சி அருளம்பலம், வட்டுக்கோட்டை எம் பி திரு ஏ தியாகராசா ஆகிய இருவரும் தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

நேற்றுக்காலை கட்சிக் காரியாலயத்தில் நடைபெற்ற காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

கட்டுப்பாட்டை இனிமேல் மீறாமல் நடந்துகொள்வதாக கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி உறுதி அளித்ததால் அவர் மீது எதுவித ஒழுங்கு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. திரு. அருளம்பலத்தையும், திரு. தியாகராசாவையும் கட்சியிலிருந்து வெளியேற்றும் தீர்மானத்துக்கு திரு. ஆனந்தசங்கரி ஆதரித்து வாக்களித்தார்.

நேற்றுக்காலை உபதலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் காங்கிரஸ் கட்சி நிர்வாகசபைச் செயற்குழு கூடியது. மூன்று எம். பிக்கள் உட்பட 22 உறுப்பினர்கள் இதில் கலந்துகொண்டனர். முன்னாள் உடுப்பிட்டி எம் பி திரு மு சிவசிதம்பரம், முன்னாள் வவுனியா எம் பி திரு டி சிவசிதம்பரம், முன்னாள் யாழ் நகர மேயர் திரு வி எஸ் துரைராசா, திரு என் சிவனேசன், திரு எஸ் கல்லிபுரம், திரு ஆர் என் சிவப்பிரகாசம், கிளிநொச்சி பட்டணசபை உறுப்பினர் திரு கிருஷ்ணராசா இக்கூட்டத்தில் கலந்துகொண்டவர்களில் சிலராவர்.

ஒருவருடத்துக்குள் காங்கிரஸ் மாநாடு நடைபெறுவதால் இச்செயற்குழுக் கூட்டம் சட்டப்படி செல்லுபடியாகாது என்று நல்லூர் எம் பி திரு அருளம்பலம் வாதிட்டார். தலைவர் இதற்கு தகுந்த ஆதாரங்களுடன் திரு அருளம்பலத்தின் ஆட்சேபத்தை நிராகரித்தார்.

### தியாகராசா மன்னிப்புக் கேட்டார்

நிர்வாகச் செயலாளர் திரு. தா. சங்கரப்பிள்ளை கூட்டத்தில் சமுகமளித்தவர்கள் பட்டியலில் கையெழுத்து போடுமாறு கேட்டபோது திரு. ஆ. தியாகராசா எம். பி. அந்தப்பட்டியலைத் தட்டிக்கீழே விழுத்தினார் என்றும் பின்னர் சபையோரின் வேண்டுதலின்படி அவர் மன்னிப்புக் கோரினார் என்றும் தெரியவருகிறது.

### இரு எம் பிக்களும் வெளிநடப்பு

கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது சுமார் 11 மணியளவில் திரு. தியாகராசா

[6-ம் பக்கம் பார்க்க]

## எம்.பி. பதவிகளை ராஜினாமா செய்யும்படியும் கோரிக்கை

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லூர் எம். பி. திரு. சி. அருளம்பலம், வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ, தியாகராசா ஆகிய இருவரும் தங்கள் எம். பி. பதவிகளையும் ராஜினாமாச் செய்யவேண்டும் என்று கோரும் தீர்மானம் நேற்று நடந்த தமிழ்க்காங்கிரஸ் செயல் கமிட்டி கூட்டத்தில் நிறைவேறியது.

எம். பி. பதவிகளை ராஜினாமா செய்யுமாறு இரு எம். பிக்களையும் கோரும் கடிதங்களை காங்கிரஸ் நிர்வாக செயலாளர் திரு. சி. சங்கரப்பிள்ளை அனுப்பி வைப்பார்.

### முதலியாரிடமும் விளக்கம்

சமீபகால அரசியல் நடவடிக்கைகள்பற்றி விளக்கம் தரவேண்டுமென முதலியார் சி. முத்துத்தம்பியை கோரும் தீர்மானமும் நிறைவேறியது.

கீழ்க்காணும் தீர்மானமும் நிறைவேறியது: தமிழ் பேசும் மக்களின் சம்மதமின்றி, அரசியல் நிர்ணய சபையால் அண்மையில் நிறைவேற்றப்படவிருக்கும் புதிய அரசியல் திட்டத்தை அரசியல் நிர்ணயசபையின் உள்ளேயும் வெளியேயும்

[5-ம் பக்கம் பார்க்க]

## அளவெட்டி அடைவுகடை வழக்கு இன்று தாக்கல்

யாழ்ப்பாணம், திங்கள்

கடந்த சனிக்கிழமை மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவிருந்த அளவெட்டி அடைவுகடைக் கொள்ளை சம்பந்தமான வழக்கு அன்றைதினம் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் இன்று திங்கட்கிழமையே தாக்கல் செய்யப்படும் என்றும் தெரிகிறது.

நான்கு லட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளைக் கொள்ளை அடித்ததாகவும், அடைவுகடை உரிமையாளர் தம்பிமுத்துவைக் கொலை செய்ததாகவும், சட்டவிரோதமாகக் கூட்டம் கூடியதாகவும் குற்றம்சாட்டி இக்கொள்ளை சம்பந்தமாக கைதுசெய்யப்பட்டுள்ள ஏழுபேர்களுக்கும் எதிராக பொலிசாரினால் இவ்வழக்கு இன்று தாக்கல் செய்யப்படும்.

இவ்வழக்கு தாக்கல் செய்வது சம்பந்தமாக வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், உதவி பொலிஸ் சுப்பிரின்டென் திரு. பெரேரா, சுன்னாகம் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி திரு சுந்தரம் ஆகியோர் நேற்று ஆலோசனை நடத்தினர்.

## தீர்மானத்துக்கு நல்லூர் எம்.பி. மறுப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

நேற்று நடைபெற்ற காங்கிரஸ் கட்சி செயற்குழுக் கூட்டம் சட்டப்படி முறை தவறென்றும் இந்தச் செயற்குழு எடுக்கும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தமுடியாதென்றும், தங்களைக் கட்சியிலிருந்து வெளியேற்றுவதென்று எடுக்கப்பட்ட தீர்மானம் செல்லுபடியாகாதென்றும் நல்லூர் எம். பி திரு. சி அருளம்பலம் தெரிவித்துள்ளார்.

திரு. அருளம்பலம் மேலும் குறிப்பிட்டதாவது:

"31-12-70-க்குப்பின் சட்டப்படி உத்தியோகபூர்வமாக இந்தச் செயற்குழு செயற்படமுடியாது. அத்துடன் பல செயற்குழுக்கூட்டங்கள் உண்மையான அங்கத்தவர்களுக்கு அழைப்பு விடாமல் கூட்டப்பட்டுள்ளன. அதற்கு மாறாக முன்னர் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட பல அங்கத்தவர்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டு கூட்டத்திலும் கலந்துகொண்டனர். எமக்கு ஆதரவான பல உறுப்பினர்களுக்கு அழைப்பு விடாமலேயே கூட்டங்களை நடத்தியிருந்துள்ளனர். உதாரணமாக 23-2-72-ல் நடைபெற்ற கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்ட எமது ஆதரவாளர்களான அங்கத்தவர்களை கூட்டத்தில் கலந்துகொள்ள அனுமதி மறுக்கப்பட்டது.

இவ்விதம் சட்டப்படி கூட்டம் நடைபெறுவதால் நேற்று எடுக்கப்பட்ட தீர்மானத்தை நான் ஏற்க முடியாது. 31-12-70க்குப் பின்னர் இந்தச்செயற்குழு பதவிவகிக்கமுடியுமானால், நானும் அதில் தொடர்ந்து இருக்கமுடியுமென்றே கூறுகின்றேன். கட்டுப்பாடு மீறியது பற்றி விளக்கம் தரும்படி எனக்கு மேற்படி செயற்குழுவால் விடுக்கப்பட்ட கடிதத்துக்கு இச்செயற்குழு இவ்விதமான நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரமற்றதென்பதாலேயே நான் பதில் அனுப்பவில்லை"

## அரசியல் அமைப்புப் பற்றி திருமலையில் ஆலோசனை

### தமிழ்த் தலைவர்களுக்கு எஸ். ஜே. வி. அழைப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

புதிய அரசியல் அமைப்புத் திட்டம்பற்றி தமிழ் மக்களின் ஏகோபித்த கருத்தைத் திரட்டும் பொருட்டும் தமிழரசுக் கட்சியின் தலைவர் திரு எஸ் ஜே வி செல்வநாயகம் இம்மாதம் பதினான்காம் திகதி காலை திருக்கோணமலை நகர மண்டபத்தில் ஆலோசனைக் கூட்டமொன்றைக் கூட்டுகிறார்.

அரசியல் கட்சித் தலைவர்கள், மலைநாட்டுத் தோட்டத்தொழிலாளர் சங்கத் தலைவர்கள் மற்றும் அரசியலில் ஈடுபடாத பிரமுகர்கள் ஆகியோருக்கு திரு எஸ் ஜே வி செல்வநாயகம் அனுப்பி வைத்துள்ள அழைப்பில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

இம் மாதம் 22ந்திகதியளவில் புதிய அரசியல் திட்டத்தை நிறைவேற்றி இலங்கைக் குடியரசாக்க முயற்சி நடப்பதை அறிவீர்கள். அதைப்பொறுத்துத் தமிழ் மக்களின் ஏகோபித்த கருத்தை உருவாக்க வேண்டியது அவசியம். அதன் பொருட்டு இம்மாதம் 14-ம் திகதி காலை பத்துமணிக்கு திருக்கோணமலை நகர மண்டபத்தில் ஓர் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்.

## நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு நீர்வேலி ஸ்ரீவிநாயக சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. இ. சரவணமுத்து தலைமையில் நடைபெற்றது பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் செ. சேனாதிராசா உபதலைவர் இ. சரவணமுத்து காரியதரிசி இ. துரைசிங்கம் இணைக்காரியதரிசி சி. சிவபாதம் தனாதிகாரி சி. மங்களேஸ்வரன் இ. ஜெகதீசன் விளையாட்டுப்பகுதி சே. யோகநாதன் த. சோதிலிங்கம் கலைப்பகுதி இ. குமாரராசா ப. குருநாதசர்மா நிர்வாக சபைத்தெரிவும் தெரிவும் இடம் பெற்றது.

0 0 0

யாழ்ப்பாணம், திங்கள் ஸ்ரீ வாகீஸ்வரி இளைஞர் முன்னேற்றக்கழக உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் தெ. சோதிலிங்கம், உபதலைவர் வ. சண்முகராஜா, காரியதரிசி, த. வல்லீர் செல்வன், உப. காரியதரிசி செ. குமாரசாமி, தனாதிகாரி. சி. ஆல்பேட், உபதனாதிகாரி ச. செல்வராசா பதினொருபேர்கொண்ட நிர்வாக சபை தெரிவு இடம் பெற்றது.

0 0 0

உடுப்பிட்டி, ஞாயிறு தெற்கு இலந்தை சனசமூக நிலைய அங்குரார்ப்பணக் கூட்டம் திரு க சின்னப்பு தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் திரு தே. வெற்றிவேல், தலைவர் திரு. க சின்னப்பு, உபதலைவர் திரு சி கனகு, காரியதரிசி திரு மா தியாகராசா, உபகாரியதரிசி திரு இ மாயவன், தனாதிகாரி திரு சுந்தரம், பத்திராதிபர் திரு மு நாகமணி, கணக்குப் பரிசோதகர் திரு நா சின்னத்தம்பி உபபரிசோதகர் திரு கொ கிருஷ்ணபிள்ளை

விளையாட்டுக்குழு திரு க நடேசன், திரு இ பரஞ்சோதி, நாடகக்குழு திரு வைரவர் குணசேகரன், சோமசுந்தரம், மாயவன், கிருஷ்ணன், சின்னத்துரை சமாதானசபை திருவாளர்கள் மகேஷ், தேவராசா, பெருமாள், சின்னப்பு கனகு, தியாகராசா சுந்தரம், கணபதிப்பிள்ளை.

0 0 0

யாழ்ப்பாணம், திங்கள் ஸ்ரீ வாகீஸ்வரி மடாலய மன்ற உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. மு. தேவராசா உபதலைவர் க. தவானந்தன் செயலாளர் க. தர்மகுலசிங்கம் தனாதிகாரி செ. அரசலிங்கம் உபதனாதிகாரி செ. வஞ்சலிங்கம். திரு. வரமலிங்கம். செ. சிதம்பரநாதன் ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினராகத்தெரிவு செய்யப்பட்டனர்.

0 0 0

மாவிட்டபுரம், ஞாயிறு கத்திலவத்தை சனசமூக நிலையத்தின் பொதுக் கூட்டம் திரு பொ. அருணாசலம் தலைமையில் நடந்த சமயம் புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: இ. குருசாமி தலைவர்: மு. வீரவப்பிள்ளை உபதலைவர்; பொ. அருணாசலம், காரியதரிசி: கு. நடேசபிள்ளை, உப காரியதரிசி ரா. இராசரத்தினம், தனாதிகாரி ச. சுப்பிரமணியம், கணக்குப் பரிசோதகர்: மூ. சிவசம்பு.

நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

தொழில் நுட்பக்கல்லூரி

## கணக்கியல் டிப்ளோமா பரீட்சை முடிவுகள்

கொழும்பு, ஞாயிறு கடந்த வருடம் நவம்பர் மாதம் பரீட்சைப் பகுதியினரால் நடாத்தப்பட்ட கொழும்பு இலங்கை தொழில் நுட்பக்கல்லூரியின் கணக்கியல் டிப்ளோமா பட்டப்பரீட்சை முடிவுகள் வருமாறு:

இறுதி [ஆங்கிலம்] 1-ம் பகுதி

எஸ். அம்பலவாணர், எச். பி. குணதாச, எம். டி. ஐ. எச். பெரேரா, கே. செல்வரத்தினம், பி. எல். வி. கே. ஆர். உடுகம்போல, டி. ஆர். டபிள்யூ. டி. சொய்சா.

11-ம் பகுதி (சித்தி)

ஈ. ஆனலிங்கம் ஏ. கணேசலிங்கம், எஸ். குமாரலிங்கம், டி. ஏ. குலசிங்க, எஸ். சிவஞானசுந்தரம்.

மத்திய தரம் (ஆங்கிலம் சித்தி)

வி. இளலிங்கம், ஜி. ஜி. எல்: குணசேகர, ஜே. டி. கெப்பெற்றியாரச்சி, வி. கனகசபாபதி, ஜி. எல். ஈ. பெரேரா, வி. சுந்திரபாலன், ஜி. எச். கே. கே. ஏ. திலகசிறி, கே. திருஞானசந்திரன்.

## புதிய கூட்டுறவு அமைப்புக்கு எம். பி. பாராட்டு

பருத்தித்துறை, ஞாயிறு "கூட்டுறவு இயக்குநர் சபைகளில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளே இடம்பெறவேண்டுவது ஜனநாயக ரீதியில் வரவேற்கத்தக்கது எனத் தமிழரசுக்கட்சி ஆட்சிமன்றத்தில் அழுத்தந்திருத்தமாக ஆளுங்கட்சியினருக்கு வற்புறுத்தியது. ஆனால் இன்றுகட்டைவேலி ஆரம்ப சங்கத்தின் சாதனைகளை நோக்குமிடத்தில் அச்சங்கத்தை ஒரு விதிவிலக்காகக் கொண்டு, அரசாங்கத்தால் நியமிக்கப்படும் உறுப்பினர் இயக்குநர் சபையில் இடம் பெறுவது வரவேற்கத்தக்கது என்ற முடிவுக்கு நான் வந்திருக்கிறேன்"

இவ்வாறு உடுப்பிட்டிஎம். பி. திரு. க. ஜெயக்கொடி வதிரி வடக்குக் கூட்டுறவுச் சங்கத் திறப்பு விழாவில் உரையாற்றும் போது குறிப்பிட்டார். திரு. பி. அருணாசலம் தலைமைதாங்கினார்.

உடுவில்லிலே

## சனசமூக நிலைய சமாசப் போட்டி முடிவுகள்

மாவிட்டபுரம், ஞாயிறு யாழ்: மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாச உடுவில் கிளையின் உப-விழாப் போட்டிகள் மானிப்பாய் மெமோறியல் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன.

ஏராளமான சனசமூகநிலையங்களுக்கிடையில் நடைபெற்ற இப்போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

பேச்சு சி யோகரத்தினம் (சண்டிலிப்பாய் நவசக்தி ச. ச நிலையம்), சி தயாபரதேவி (சண்டிலிப்பாய்ப்பாரதி ச ச நிலையம்), இ சற்குணராசா [மானிப்பாய் ஸ்ரீ பாரதி ச ச நிலையம்].

நடனம்: ஸ்ரீ பாரதி சனசமூகநிலையம் மானிப்பாய். நாடகம்: ஸ்ரீ பாரதி ச ச நிலையம் மானிப்பாய் பாரதி ச ச நிலையம் சண்டிலிப்பாய், நவசக்தி ச ச நிலையம் சண்டிலிப்பாய், ஸ்ரீலங்கா ச ச நிலையம் உடுவில்.

இப்போட்டிக்கு ப வரதராசா, எஸ் பாலசிங்கம், திருமதி க தம்பரத்தினம், க நடேசன். நா வ சண்முகம், ஜீ அன்னப்பா ஆகியோர் மத்தியஸ்தர்களாக இருந்தனர்.

யாழ்ரசிக ரஞ்சனசபா

## இன்றைய நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், திங்கள் யாழ் ரசிகரஞ்சன சபையின் இசைவிழாநிகழ்ச்சியில் பத்தாம் நாளாகிய இன்றைய நிகழ்ச்சிகள் விபரம் வருமாறு:

இன்றைய நிகழ்ச்சிகள் மல்லாகம் நீதவான் திரு ஏ. சிவானந்தம் தலைமையில் நடைபெறும். இரவு 6-40க்கு திரு எம். எஸ். சண்முகநாதன் கோஷ்டியினரின் மங்களவாத்தியத்தோடு ஆரம்பமாகும் அதையடுத்து திருமதி பூமணி இராசரத்தினம் திரு எஸ். சண்முகரத்தினம் ஆகியோரின் இன்னிசைக் கச்சேரி இடம் பெறும்.

## "வஞ்சம் தீர்க்கும் நோக்கம் வேண்டாம்"

யாழ்ப்பாணம், திங்கள் சமூகவிரோத நடவடிக்கைகளிலும் சட்டவிரோத செயல்களிலும் ஈடுபடுபவர்களை கண்டுபிடித்து அவர்களுக்கு தக்க தண்டனை பெற்றுக் கொடுப்பதுதான் எமது நோக்கமாக இருக்க வேண்டுமேயொழிய வஞ்சம் தீர்க்கும் நோக்கம் அறவே இருக்கக்கூடாது.

இவ்வாறு சுத்தரேவடை மக்கள்குழுவின் முதலாவது கூட்டத்தில் தலைவர் திரு சி. கணேசலேல் கூறினார். அடுத்துப்பேசிய திரு விஜயானந்தன் எமது கிராமத்தின் முன்னேற்றத்திற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் இறங்கி மக்களை ஊக்குவித்து இக்கிராமத்தை முன்னேற்றத்துக்கு கொண்டுவர வேண்டும். ஆனால் நாம் எதையும் அரசியல் கண்ணோட்டத்துடன் நோக்கக்கூடாது என்றும் குறிப்பிட்டார்.

## "போதிய ஆசிரியர் இல்லாத குறையைப் போக்குக"

மாவிட்டபுரம், ஞாயிறு இப்பகுதிப் பாடசாலைகளில் போதிய ஆசிரியர் இன்றி மாணவர் படும் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய ஆசிரியர்களை நியமிக்கவும்;

இவ்வாறுகோரும் தீர்மானம் காங்கேசன்துறைப் பட்டினசபை 6-ம் வட்டார மக்கள்குழுவின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது

திரு. எஸ். சிவஅடியார் தலைமையில் மயிலிட்டியில் நடைபெற்ற இக் கூட்டத்தில் நிறைவேறிய வேறுசில தீர்மானங்கள் வருமாறு:

மீனவர்கள் மீன்பிடி உபகரணங்கள் இன்றி கஷ்டப்படும் நிலையை உணர்ந்து மீனவர்களுக்கு சகல உபகரணங்களையும் வழங்கவேண்டும்.

முன்பு திட்டமிட்டபடி காங்கேசன்துறை பட்டினசபை எல்லைக்கும் மின்தறி நெசவு நிலையம் நிறுவவேண்டும்.

இப்பகுதி பொதுமக்களின் வசதியை முன்னிட்டு ஐக்கிய பண்டகசாலைகள் நகமுறையில் இயங்க நடவடிக்கை எடுக்கவும்;

மயிலிட்டி கட்டுவன் 799-ம் இலக்க பஸ்ஸை தெல்லிப்பளை ஆஸ்பத்திரி வைத்தியசாலைக்கூடாக செல்ல வசதிசெய்து தரும்படி கோருவது.

## உற்சவம்

ஆனைக்கோட்டை ஞாயிறு நவாலி சித்தாமணிப்பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகியது இம்மாதம் 12-ம் திகதி தேர்த்திருவிழாவும் 13-ம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

## இன்று

வண்ணை அரசடி விநாயகர் ஆலயத்தில் மூன்றாந் திருவிழாவாகிய இன்று நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன ஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் விநாயகர் பெருமை என்னும் விடயம் பற்றிப் பேசுவார்.

## திருவில் வெற்றி

வல்வெட்டித்துறை, ஞாயிறு வல்வை திருவில் இளைஞர் விளையாட்டுக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட வருத்தாட்டப் போட்டியின் இறுதி சாம்பியன் போட்டியில் "குச்சம் ஷனிங்ஸ்" விளையாட்டுக் கழகத்தினரும், திருவில் வி கழகத்தினரும் கலந்துகொண்டனர். இதில் இதில் திருவில் விளையாட்டுக் கழகத்தினர் வெற்றிபெற்று சாம்பியன் வெற்றிக் கேடயத்தைப் பெற்றுக்கொண்டனர்.

## சிறுவர் பாடசாலை

ஆனைக்கோட்டை ஞாயிறு: நவாலிப்பகுதியில் சிறுவர் பாடசாலையொன்று நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தினர் சார்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.





ஓஹோ! ஓஹோ!
என்றிடுவீர்!
ஓஹோவையே
கேட்டு வாங்கிடுவீர்!
ஓஹோவின் சலவையில்
திருப்தியடைந்திடுவீர்!




ஓஹோ இதுதான்
சிறந்த பொருளென்று
உமது சுற்றம்
மகிழ்ந்திடுமே!

ஓஹோ சோப் உங்கள் தேவைக்கு எங்கும் கிடைத்திடுமே!

CSK

சி. எஸ். கே. மில்ஸ்

8 MAI 1972
UNDERGRADUATE LIBRARY



## மணிவாக்கு

எல்லார் உருவமும் என் உருவாகும்
எல்லார் நலன்களும் என் நலமாகும்
எல்லார் வலமும் என் வலமாகும்
நல்லோர் என்னுரை நயந்து கொள்வாரே.
— யோகசுவாமிகள்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna.
Post Box: 49 Jaffna   Telephone: 389

சாதாரண பரிதாபி வருஷம் சித்திரை மாதம்
26-ந் திகதி (8-5-72)

# தூதுவர்கள் மகாநாடு

வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதர் களின் ... நமது தூதரகங்களிலே பெரும்பாலும் ...

[illegible]

# சேக்கிழார் விழாவிற் கலந்து கொள்ளும்

## திருவாசக மணி கே எம் பாலசுப்பிரமணியம்

[க. சொக்கலிங்கம் (சொக்கன்) இணைச்செயலாளர், அ. இ. சேக்கிழார் மன்றம்]

மே மாதம் 18, 19, 20-ம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் சேக்கிழார் பெருமானுக்கு விழா எடுக்கும்பொழுது சிறப்புச் சொற்பொழிவாளராகத் திருவாசகமணி கலந்து கொள்வார். இவர் தென்னாபிரிக்கா, மலேசியா, இந்தோனேசியா முதலாயிடங்களுக்கு விஜயஞ்செய்து சைவசமயம் பற்றியும் இந்து தமிழ்க்கலாசாரம் பற்றியும் தமிழிலும் ஆங்கிலத்திலும் அரியபெரிய சொற்பொழிவுகளாற்றிப் புகழ்பூண்டவர். அங்கெல்லாம் வாழும் தமிழ் மக்கள் மாத்திரமன்றி மற்றை இனமக்களும் அன்னாரின் பிரசங்கமாரிகளிலே மூழ்கித் திளைத்துப் பயனடைந்துள்ளனர்.

ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.

உலகப்புகழ்வாய்ந்த தத்துவஞானியும் பாரதத்தின் முன்னாள் ஜனாதிபதியுமான கலாநிதி எஸ். இராதாகிருஷ்ணன் இவரின் திருவாசக மொழிபெயர்ப்புப் பற்றிக் கூறியுள்ளதாவது: "திருவாசகத்தை ஆங்கிலக் கவிதைவடிவிலே தந்த தங்கள் முயற்சி பாராட்டத்தக்கது. சைவசித்தாந்தத்திலே உங்களுக்கு உள்ள நிறைந்த அறிவும்சடுபாடும் சிறப்பாக மூலநூலின் ஆற்றலையும் உணர்வினையும் உங்கள் மொழிபெயர்ப்பிலும் கொணர்வதில் வெற்றி யடைந்திருக்கிறீர்கள். உங்கள் ஆழ்ந்த பக்தியையும் பரந்த கல்வியறிவையும் பாராட்டுகிறேன்.

இந் நூல் மிகுந்த பிர ...

கையாளுவதில் கைதேர்ந்த தலைசிறந்த கலைஞர் ஒருவராகிய மகாகனம் ஸ்ரீநிவாச சாஸ்திரி திருவாசகமணியின் சொற்பொழிவுத் திறன் பற்றிக் கூறுவதும் இங்கு கருதத்தக்கது. இவர் அணிநலமும், நகைச்சுவையும், செப்பமும் வாய்க்கப்பெற்ற நடையினைக் கையாள்வதில் வல்லாராய் விளங்குகிறார். அவரின் பேச்சு ஆற்றொழுக்குப் போன்றது. சக்தியும் கவர்ச்சியும் வாய்ந்தது."

சிவமத்தமணி, நாவலர்மணி, அருள்நிலக்கோன் முதலாகிய என்ன பட்டங்களைப் பெற்றுள்ள திருவாசக மணி கே எம். பாலசுப்பிரமணியம் 1963ம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கும் 1970—ம் ஆண்டு மலேசியாவிற்கும் இந்தோனேசியாவிற்கும் ...

[illegible]

# யு. என். பி. கேட்கவில்லை நாம் ஆதரிக்க வில்லை

## நம்பிக்கையில்லா தீர்மானம் பற்றி உடுவில் எம். பி. விளக்கம்

யாழ்ப்பாணம், திக. ...

[illegible]

# நல்லூர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

[illegible]

## காலியில் பித்துக்குளி

[illegible]

## ஜகதோர மகாநாடு

[illegible]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் கொம்பனியாரால் யாழ்ப்பாணம் ... இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1972-ம் ஆண்டு மே மாதம் 8-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.